எம்மிடம்......
உள்ளூர், வெளியூர்

காப்பற் வகைகள் (Floor)
லொறிகளுக்கு
பொடி அடிக்கும்
(F) பிற்றிங்ஸ்........
மெழுகுசிலை வகைகள்
இன்னும் பல பொருட்கள்
நியாய விலையில் கிடைக்கும்.

H. ESMAILJEE & Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016



விலை: சதம் 60

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 31 றம்ழான் 12 இதழ் 151

யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-7-1981



டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும்
திருத்தவும் புதிதாக வாங்கவும்
விஜயம் செய்யுங்கள்.

டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 8174


# "யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு திட்டங்கள் தேவை

## உண்மையாக உழைப்பேன் என்கிறார் புதிய செயலாளர்

### முதலாவது கூட்டம் 20-ல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாண மாவட்டத்திற்கு பல அபிவிருத்தி திட்டங்கள் தேவை. இம் மாவட்டத்தின் அபிவிருத்திக்குத் திறம்பட என்றால் செயலாற்ற முடியும். இம்மாவட்ட அபிவிருத்திக்கு நான் உண்மையாக உழைப்பேன்'' என்று, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் செயலாளராகப் பதவியேற்றுள்ள திரு. தேவநேசன் நேசையா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ். செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற வரவேற்புக் கூட்டமொன்றில் பேசுகையில் தான் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பீ. விஜயக்கோன் தலைமையில், யாழ். செயலக ஊழியர்களால் இவ்வரவேற்புக்கூட்டம் நடாத்தப்பட்டது. யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியும் கலந்துகொண்டார்.

வரவேற்பின் பின் இம்மாதம் 20-ம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கும் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையின் முதலாவது கூட்டத்துக்கான அங்கத்தவர்கள் அழைப்பிதழுக்குப் பொறுப்பாக திரு. நேசையா தமிழில் கையெழுத்திட்டார்.

### நீண்டகால அனுபவமிக்கவர்

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் செயலாளராகப் பதவிஏற்றுள்ள திரு. தேவநேசன் நேசையா, முன்னர் மன்னாரிலும், மட்டக்களப்பிலும் அரசாங்க அதிபராகக் கடமையாற்றியவர்.

செயல்படுத்தும் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், சமூக பொது முதலீட்டுத்துறை பகுதித் தலைவராகவும் பதவிவகித்துள்ள இவர், 'சசெக்ஸ்' பல்கலைக் கழகத்தில் எம். எஸ். ஸி. பட்டம் பெற்றவர். நீண்டகால நிர்வாக அனுபவம் கொண்ட திரு நேசையா, அபிவிருத்தி சம்பந்தப்பட்ட விஞ்ஞான பூர்வமான அறிவுள்ளவர். இதனால் யாழ். மாவட்ட திட்டமிடல் பிரிவு விஞ்ஞான ரீதியில் மாற்றி அமைக்கப்படுவதற்கு இவரின் நியமனம் துணைபுரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[6ம் பக்கம் பார்க்க]


# ஹோம் பினான்ஸ்
லிமிட்

82, கன்னாதிட்டி, (போன்: 8310) யாழ்ப்பாணம்.

ரூபா-1000-க்கு மேற்பட்ட ஒருவருட வைப்பிற்கு ஆகக்கூடுதலான வட்டியை வழங்குகிறது.

வருடம் 30% வட்டியை

வருட முடிவில் வழங்கும்

அல்லது

வருடம் 28% வட்டியை

மாதாமாதம் வழங்கும்.

இடைப்பட்ட காலத்தில் வைப்புப் பணத்தை மீளப்பெறுவோர்க்கு எதுவித வட்டிக் கழிவும் செய்யப்படமாட்டாது.

உங்கள் பணத்தை விவேகமாக முதலீடுசெய்யுங்கள்.

தலைமையகம்: 463, காலி வீதி, கொழும்பு-3

தொலைபேசி: 89190


### மின்சக்தி

[கொழும்பு]

நேற்று முன்தினம் முன்னெப்பொழுதுமில்லா தளவு மின்சாரசக்தி உபயோகிக்கப் பட்டுள்ளதாக மின்சாரசபை அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் 383.4 மெகவாட் மின்சக்தி பாவிக்கப் பட்டுள்ளது.

### ஓர் அன்பான அறிவிப்பு!

சோதனைகள் சொல்லிக்கொண்டு வருவதில்லை!

ஆரம்ப காலம் முதலே 'ஈழநாடு' பத்திரிகை மக்கள் பணிக்கென்றே தன்னை ஆர்ப்பணித்துக்கொண்டுசெயல் படுவதை வாசகர்களுக்கு நாம் மீண்டும் மீண்டும்நினைவு படுத்துவது அவசிய மில்லை.

'ஈழநாடு' கட்டிடம் எரிந்து சாம்பலாக்கப்பட்ட வேளையில்எமக்காக எந்த வித உதவியையும் புரிவதற்கு பொது மக்களும், சமூகப் பிரமுகர்களும்,ஆசிரியர்களும், பல்கலைக்கழக அன்பர் களும் ஆர்வத்தோடு முன்வந்ததை நாம் மறந்து விடுவதற்கில்லை.

இக்கட்டான சூழ்நிலையில், தவிர்க்க முடியாத பொருளாதார நிலைமைகளினாலும் காகித விலை, அச்சாக்க செலவுகள் போன்ற இன்னோரன்ன பிரச்னைகளினாலும் 'ஈழநாடு' தினப்பதிப் பின்விலையை 60 சதத்திலிருந்து 75 சதமாக உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்பதை மிக்க விநயமாகத் தெரிவித்துக்கொள்கின்றோம். இச்சிறுவிலை உயர்வைப் பொருட்படுத்தமாட்டீர்கள் என நம்புகின்றோம். இவ்விலை உயர்வு 16-7-1981 முதல் நடைமுறைக்கு வரும்.

—நிர்வாகி

## நேற்றிரவு ரயில் நிலையத்தில் ஏற்பட்ட பரபரப்பு!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் நேற்றிரவு நிகழ்ந்த ஒரு சம்பவத்தினால் ரயில் நிலையம் அல்லோலகல்லோலப்பட்டது!

காரைநகர் கடற்படையைச் சேர்ந்த சிலர் தங்களது சகாக்களை ரயிலில் வழியனுப்

[6ம் பக்கம் பார்க்க]


## பெண்கள் தேவை

யாழ்நகரில் பிரபல புகைப்பட ஸ்தாபனத்திற்கு ரீ டச்சிங் (Retouching-Finishing) அனுபவம்வாய்ந்த பெண்கள் தேவை. பழக விருப்பம் உள்ளவர்கள் வரைதல் கலையில் சிறந்த சித்தியிருந்தால் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல 0323,
மே/பா. ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 0323



உ
சிவமயம்

## கதிர்காமத் தீர்த்தோற்சவம்

கதிர்காமக்கந்தனின் தீர்த்தோற்சவம் 17-7-81-ல் நடைபெறும் அன்றையதினம் செல்வச்சந்நிதியில் தீர்த்தோற்சவ விழா நடைபெற்று இரவு செல்வச்சந்நிதி முருகப்பெருமான் வீதிவலம் வந்தருளுவார்.

0320

பிரிட்டன் கலவரம்

# பொலிசாருக்கு ரிவோல்வர், கவசவண்டிகள் கிடைக்கும்!

## இராணுவ முகாம்களில் கைதிகள்

லண்டன், ஜூலை 14

பிரிட்டனில் வெகுவேகமாகப் பரவிவரும் கலவரங்களில் ஈடுபட்டு கைதுசெய்யப்படுவோர் தொகை அதிகரித்து சிறைச்சாலைகளில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதை அடுத்து இராணுவ முகாம்களிலும் சிறைப்பிடிப்பவர்களை காவலில் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இத் தகவலை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் திரு. வில்லியம் வைட்லோ தெரிவித்துள்ளார்.

கலகக்காரரை அடக்குவதற்கு பொலிசாருக்கு கவச வாகனங்களும் கைத்துப்பாக்கிகளும் வழங்கப்படும் என்றும் திரு. வைட்லோ தெரிவித்தார்.

கலகங்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டவிதிகள் இயற்றப்பட உள்ளன என்றும் அவர் கூறினார். (அ)

## ரூமையின் இல்லம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் ரூமையின் இல்லம் முதலிடத்தைப்பெற்றது. (மனி-றி)

## உத்தரபிரதேசத்தில் வெள்ளப் பெருக்கு

புதுடில்லி, ஜூலை 14

உத்தரப்பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 15 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதுவரை 59 பேர் பலியாகினர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நதிகள் பெருக்கெடுத்து ஓடுவதினால் பல கிராமங்கள் நெருக்கடியில் சிக்கியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### குஜராத்திலும்

குஜராத்திலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அணைக்கட்டு ஒன்று உடைப்பெடுத்ததால் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## எதிரி விடுதலை

(பசிலைப்பள்ளி)

வத்திராயன் தெற்குப்பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கொள்ளை வழக்கில் எதிரி விடுதலையானார்.

வத்திராயன் தெற்கு ப. நோ. கூ. சங்கக்கிளையில் சுமார் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான புடவைகள், பற்றரி வகைகள், யாற் பொருட்கள் என்பவற்றினை கடையை உடைத்துக் கொள்ளையடித்ததாக நாகேந்திரம் என்பவருக்கெதிராகப் பசிலைப் பொலிசார் குற்றம் சாட்டி வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பளை சுற்று நீதிமன்றத்தில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. க. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் எதிரியின் சார்பில் சட்டத்தரணி செல்வி நளினி நவரத்தினத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். சிறி லோயா ஆஜரானார். பளை பொலிஸ் உத்தியோகத்தர் திரு. வ. சூரியப்பிரகாசம் வழக்கை நடத்தினார்.

## பிரான்ஸ் விவகாரத்தில் அமெரிக்கா தலையீடு?

### ஜனாதிபதி மிட்டரான் கண்டனம்

பாரிஸ் ஜூலை 14.

"பிரான்ஸ் கடைப்பிடிக்கும் கொள்கை பிரெஞ்சு மண்ணில் தீர்மானிக்கப்படும். பிரான்ஸ் நாடு பிரெஞ்சு மக்களின் நலவுரிமைகளைத் தவிர வேறு எந்தக் காரணமும் பிரெஞ்சு ராஜ்யத்தின் தலைவருடைய கொள்கை தீர்மானிப்புக்கு வழிகாட்ட அனுமதிக்கப்படாது" என்று பிரான்ஸின் புதிய ஜனாதிபதி பிரான்கோஸ் மிட்டரான் கூறியுள்ளார்.

பிரெஞ்சு அமைச்சரவையில் கம்யூனிஸ்டுகள் சேர்க்கப்பட்டிருப்பது குறித்து அமெரிக்கா ராஜாங்க இலாகா வெளியிட்டுள்ள அறிக்கை பற்றி பிரஸ் தாபிக்கு பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அமெரிக்கா அறிக்கை பிரான்ஸ் நாட்டு விவகாரத்தில் பலவந்தம் பிரயோகிப்பதாக இருக்கும் என்று தெரிவித்த ஜனாதிபதி மிட்டரான் சுமார் 45 லட்சம் பிரெஞ்சுப் பிரஜைகள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வாக்களித்தனர். பின்னர் அவர்கள் வாக்குகளை சோஷலிச கட்சிக்கு வழங்கினர். அந்த வாக்காளர்களை புறக்கணிக்கமுடியாது. கம்யூனிஸ்டுகளை அரசியல் வாழ்விலிருந்து ஒதுக்கிவிட்டு அவர்களை நிற்கச் முடியாது.

மத்திய அமெரிக்காவில் வாஷிங்டன் கடைப்பிடிக்கும் கொள்கை பற்றி எனக்கு சொந்த அபிப்பிராயம் உள்ளது. இரத்தக்கறை படிந்த சர்வாதிகார ஆட்சிகளின் உதவியுடன் அங்கே நடக்கும் பலாத்காரங்களுக்கு அப்பிராந்திய மக்கள் முடிவு கட்ட விரும்புகின்றனர். அந்த மக்களின் ஆத்திரத்தை யாருக்கும் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் காட்டும் ஆத்திரம் கம்யூனிஸ்டுகளின் வேலையல்ல. வாழ அவர்கள் மறுக்கிறார்கள். அவ்வளவு தான்" என்றார்.

## ஹைதராபாத்தில் கலவரம்

### மூவர் பலி

ஹைதராபாத், ஜூலை 14

ஹைதராபாத் பழையநகரில் நேற்று இடம்பெற்ற கலவரத்தை அடுத்து அங்கு கடந்த இரவு ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டது.

கலகக்காரரைக் கட்டுப்படுத்த பொலிசார் எடுத்த நடவடிக்கையின் போது பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் பலியானார் என்றும் கத்திக்குத்துச்சம்பவம் ஒன்றின்போது மூவர் பலியானார்கள் என்றும் பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவங்கள் தொடர்பாக சுமார் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தட்சர் மீது உருளைக்கிழங்கு வீச்சு!

லண்டன், ஜூலை 14

இனக்கலவரத்தால பாதிக்கப்பட்ட லிவப்பூல் நகரில் பிரிட்டிஷ் பிரதமர் மீது உருளைக்கிழங்கு உட்பட பல் பொருட்களை ஆர்ப்பாட்டக்காரர் வீசினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லிவர்பூலில் கலவரம் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்கு துப்பாக்கிகுண்டு துளைக்கமுடியாத விசேட காரில் சென்ற பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் அங்கு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். இம் மாநாடு நடைபெற்ற இடத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களே திருமதி தட்சர் மீது மேற்கூறிய பொருட்களை வீசினராம். (இ)

## கி. சே. சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிராம சேவை அலுவலர் சங்க 18வது ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்ற போது பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. எஸ். சோமசுந்தரம், துணைத்தலைவர்கள்: திரு. ரி. தனபாலசிங்கம், திரு. எம். ஒப்பிலாமணி, பொதுச்செயலாளர்: திரு. கே. கே. பேரம்பலம், உதவிப் பொதுச்செயலாளர்கள்: திரு. எஸ். ஜே. செல்லத்துரை, திரு. எஸ். வசந்தகுமார், பொருளாளர்: திரு. ஏ. சி. ரி. கிருஷ்ணராசா, கணக்குப்பரிசோதகர்: ஏ. ரி. அருணாசலம்.

16 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (மா)

## மல்லாகத்தில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

...பாசாலை ஒன்று நிறுவ வேண்டும்.

"இவ் ஆண்டுத் திட்டத்தின் சங்கத்தின் 30-ம் ஆண்டு விழாவை நடாத்துவதுடன் தொழில் நுட்ப அபிவிருத்தி வேலைகள் பற்றி நூல் ஒன்றையும் வெளியிட வேண்டும்."

மற்றும் சில தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (மா)

## குருகவி மகாலிங்கசிவம்

தென்றலின் குளிர்ச்சி தன்னைத்
தேனினர் நிலவை வானைக்
குன்றினை அதனிற் பாயும்
குளிர்ந்த வெள்ளருவி தன்னை
என்றுமே நிலைக்கும் பாவில்
இயம்பிடும் கவிதைவல்லோன்
தன்றினை நாடும் தூயன்
நற்குருவே எமபரனே.

பண்டுள நூல்கள் யாவும்
பழுதறக் கற்ற சான்றோன்
வண்டமிழ்ச் சிறப்பும் தவல
வடமொழிச் சிறப்பும் தேர்ந்தோன்
கண்டுநேர் பிரசங்கத்தால்
கவர்ந்திடும் ஆற்றல் வாய்ந்தோன்
பண்டிதர் என்று கூறுேர்
பாரிடை வியக்க வாழ்ந்தோன்

"இளங்கோ"

[இன்று கற்பனைக்களஞ்சியம் குருகவி மகாலிங்கசிவம் நினைவு நாள்]



புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் வர்த்தகரும் சமூக சேவையாளருமான திரு. கந்தையா கோபாலபிள்ளை யாழ். நீதிமன்றத்தில் சமாதான நீதவானாகப் பதவியேற்றபின் தீவுப்பகுதி அரசியல் பிரமுகரும் சட்டத்தரணியுமான திரு. வ. நவரத்தினராஜா உள்ளிட்ட... கதிரவேலு புலவே சமாதான நீதவானுக்கு மாலை அணிவித்து வரவேற்கிறார்.

## பிராமண இளைஞர் கொலை

# சிறை அலுவலர்களுக்கு நீதிபதி எச்சரிக்கை

[பசிலைப்பள்ளி]

புலோப்பளை கொலை வழக்கில் சாட்சி ஒருவரினது மனோநிலை சம்மந்தமான வைத்திய அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறிய சிறை அலுவலர்களை எச்சரித்த நீதிபதி ஒரு வார காலத்திற்குள் வைத்திய அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி பணித்தார்.

புலோப்பளையைச் சேர்ந்த சா. குகபாலசர்மா என்ற பிராமண இளைஞரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த மரியாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை ஆகிய இருவர் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு பளைச் சுற்று நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. க. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் சாட்சியாக அழைக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவன் இராசப்பு அருளானந்தம் [வயது 16] பொலிசார் தன்னைத் தாக்கிக் கொலை சம்மந்தமாக வாக்குமூலம் பெற்றதினால் தனக்கு மறதிக் குணம் ஏற்பட்டு இங்கு சாட்சியமளிக்கமுடியாமலிருப்பதாகக் கூறியதை அடுத்து சாட்சியை விளக்க மறியலில் வைத்து மனநோய் நிபுணர் மூலம் பரிசோதித்து அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி நீதிபதி பணித்திருந்தார்.

சாட்சியினது வைத்திய அறிக்கையைக் குறிப்பிட்ட காலத்தில் சமர்ப்பிக்கப்படாததையும், இது சம்பந்தமான பணிப்பு வழங்கப்பட்ட சிறை அலுவலர் திரு. இராசரஞ்சன் என்பவர் மன்றில் சமூகமளித்திருக்காததையும் அவதானித்த நீதிபதி அங்கு சமூகமளித்திருந்த மற்றைய சிறை அலுவலரைப் பார்த்து "இன்றிலிருந்து ஒருவார காலத்தில் வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று பணிக்கிறேன். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாவிட்டால் சிறை அலுவலர் இராசரஞ்சனும், நீங்களும் மன்றினால் தண்டிக்கப்படுவீர்கள் என எச்சரிக்கிறேன்" எனக் கூறினார்.

இவ்வழக்கினை பொலிஸ் உத்தியோகத்தர் திரு. வ. சூரியப்பிரகாசம் நடத்தினார். முறைப்பாட்டுக்காரர் சார்பில் சட்டத்தரணி செ. கிம்பிலைபாலனும், எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். சிறீகிலோயாவும் ஆஜரானார்கள்.

## கலைவிழா

(பசிலைப்பள்ளி)

பருத்தித்துறைத் தொகுதியின் கிழக்குட தரதேசத்திலுள்ள பாடசாலைகள் ஒன்று சேர்ந்து கலைவிழாவொன்றினை நடாத்தவுள்ளன.

மாமுனை தொடக்கம் சோரன்பற்று வரையுள்ள பாடசாலைகள் இக்கலைவிழாவில் பங்குபெற்றும். இதற்கான ஏற்பாடுகளை ...முதலாந்துறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ம. சிதம்பரநாதம் மேற்கொண்டுள்ளார்.

2-வது ஹவுஸ்புல் வாரம்
ஹரன் (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)
தொலைபேசி: 331


## இல்லப்போட்டி

(பசுமைப்பள்ளி)

பசு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இம்மாதம் 18ந் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் நெசசி எம். பி. திரு. வீ ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-பிரமிளா
கவரிமான் (கலர்)

வெல்லி (சாவகச்சேரி)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி மாலினி பொன்சேகா
வைலட் பிரேம்நாத்

வெலிங்டன் (யாழ்நகர்)
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

இன்று மட்டும்
லிடோ யாழ். நகர்
10 30, 2-30, 6-00, 9-30
அழியாத கோலங்கள்

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30 2-15, 6-30, 9-45
பாக்கியராஜ்-அஸ்வினி-சங்கிலி முருகன்
ஒரு கை ஓசை

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே!
சாந்தி (யாழ்நகர்) 10-30 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா,
தர்மராஜா (கலர்)
COMING 'COMA' The Number One Suspense Thriller

இன்னும் சிலதினங்கள் மட்டும்.
வின்சர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, சுருளிராஜன், எஸ். வி. சுப்பையா
ஆதி பராசக்தி
(கலர்—புதிய பிரதி)
பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை உண்டு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) இன்று மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்சங்கர் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சந்திரமோகன் ★ மனோரமா
பட்டாக்கத்தி பைரவன்
(ஈஸ்ட்மென்)
From 17-7-81
MAN FROM HONG KONG

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
எங்கள் தங்கம்
(புத்தம்புதிய பிரதி — கலர்)
எமது அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

TODAY ONLY
RAJAH Jaffna Daily 10-30, 2-00, 4-30 7-00 and 9-30
THE BIG BOSS
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்
17-7-81 வெள்ளிக்கிழமை மாலை 7-00 மணிக் காட்சியுடன் ஆரம்பமாகிறது!
எம்.ஜி.ஆர் - லதா
பல்லாண்டு வாழ்க


# நாடு முழுவதிலும் தாதிகள் மீண்டும் சுகவீன லீவு இயக்கம்

[கொழும்பு]

நாடு முழுவதிலுமுள்ள ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் சுமார் 6 ஆயிரம் தாதிகள் மீண்டும் திடீர் சுகவீன லீவு எடுத்துக்கொண்டு வேலைக்குச் செல்லவில்லை.

தொழிற்சங்க நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே தாதிகள் சுகவீனக் கடிதங்களை அனுப்பிவிட்டு வேலைக்குச் செல்லவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

சம்பள உயர்வு கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பித்த தாதிகள் இம்மாதம் 7ம் திகதி திடீர் சுகவீன லீவில் நின்ற பின்னர் தொடர்ந்து சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை மேற்கொண்டு வந்தனர்.

இப்போது மீண்டும் "சுகவீனக்கடித இயக்கத்"தை மேற்கொண்டுள்ளதால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இயக்கம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுமென்று தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். [இ]

## 'ஜும்ஆத்' தொழுகை வசதி

[யாழ்ப்பாணம்]

யாழ்- பல்கலைக்கழகத்தில் பயிலும் முஸ்லிம் மாணவர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆத் தொழுகைக்கான வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஐவேளைத் தொழுகைக்கான வசதியைப் பெற்றிருந்த முஸ்லிம் மாணவர்கள் ஜும்ஆத் தொழுகையை வெள்ளிக்கிழமைகளில் நிறைவேற்ற இடவசதி போதாமையால் யாழ் நகர பள்ளி வாசலுக்கே சென்று தொழுகையை நிறைவேற்றி வந்தனர். இதனால் வெள்ளிக்கிழமைகளில் பல விரிவுரைகளை இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கிருந்தது.

இது தொடர்பாக முஸ்லிம் மஜ்லிஸ் மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர் அவையும் பூரண ஒத்துழைப்பைக் கொடுத்து சென்றவாரம் ஜும்ஆத் தொழுகை ஆரம்பிக்கப்பட்டது இதற்கான விசேட ஏற்பாடுகளை யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் செய்து கொடுத்துள்ளார். [இ]

## யாழ். ஆஸ்பத்திரியில்.....:

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் தாதிகள் நேற்று மீண்டும் சுகவீனக் கடித இயக்கத்தை மேற்கொண்டதன் காரணமாக நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக ஆஸ்பத்திரி வார்டுகளில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் பலர் வீட்டுக்குச் சென்று விட்டனர்.

நேற்று அவசர சிகிச்சை பெறவேண்டிய நோயாளிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

இதே வேளையில் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளிகளுக்கு உயிர்காக்கும் அவசர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு உதவும்பொருட்டு மனிதாபிமான ரீதியில் தாதிகள் குழு ஒன்று இருபத்திநாலு மணி நேரமும் தயார் நிலையில் இருக்கிறது என்று தொழிற் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதே சமயம் கடந்த ஒரு வாரமாக தாதிகள் சட்டப்படி இயக்கத்தை மேற் கொண்டு வருவதால் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவு மூடப்பட்டுவிட்டது என்றும் சில தீர்வாகப் பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளதாக அப்பிரதிநிதி கூறினார். [இ]

## தனிஒருவரால் மட்டும் சமுதாயம் முன்னேறாது

(உடுவிட்டி)

"இன்றையநிலையில் யாழ் குடாநாட்டில் போலிக்கௌரவத்திற்காக ஆலயங்களிலும் வீடுகளிலும் ஆடம்பரச் செலவுகள் செய்வதை எமது மக்கள் குறைத்துக்கொள்ள முன்வர வேண்டும். ஆடம்பரங்களுக்காக செலவுசெய்யும் பணத்தை நல்லமுறையில் பயன்பெறச்செய்து சால மக்களும் வளமான வாழ்வு பெறச் செய்ய வேண்டும்"

இவ்வாறு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. சடாட்சர சண்முகதாஸ் கரவெட்டி கிழக்கு மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் முதலாவது வருடாந்த நிறைவுவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டுபேசுகையில் குறிப்பிட்டார்.

கரவெட்டி கிழக்கு மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு திருமதி சரஸ்வதி விநாயகம் தலைமைதாங்கினார்.

திரு. சடாட்சர சண்முகதாஸ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"சமுதாயம் ஒன்றின் முன்னேற்றம் அந்தச் சமுதாயத்திலுள்ள சகலரதும் பூரண ஒத்துழைப்பிலேயே தங்கியிருக்கிறது தனிஒருவரால் மாத்திரம் சமுதாயம் முன்னேற்றம் அடைந்துவிட முடியாது. சமுதாய அபிவிருத்தியில் சகல மக்களையும் பங்குகொள்ளச்செய்யும் முகமாகவே கிராமங்கள்தோறும் கிராமஅபிவிருத்திச்சங்கங்கள், மகளிர் அபிவிருத்திச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுவருகின்றன.

"சமுதாயத்தின் மறுமலர்ச்சியில் பெண்களின் பங்கு முக்கிய இடத்தை வகிக்கிறது. இதனாலேயே அரசாங்கம் கிராமந்தோறும் மகளிர் சங்கங்களை ஆரம்பித்து பெண்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது".

இவ்விழாவில் செல்வி சந்திரா சிற்றம்பலம் வரவேற்புரை நிகழ்த்தினார். புலோலி விவசாய போதனாசிரியர் திரு. பொன்னையா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சிவசுப்பிரமணியம் உட்படப் பலர் உரைநிகழ்த்தினர். (?)

## இல்லப்போட்டி

(யாழ்ப்பாணம்)

நவீகட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா கலந்து கொள்வார். (செ

## சுவீகரித்ததினால்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளின் பெரும்பாலான பிள்ளைகள் மற்றைய பாடசாலைகளுக்கு சமூகமளிப்பது தமது கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள் என்ற கசப்பான உண்மை வெளிவரும். பாடசாலைகளை இழக்க வேண்டியதன் அத்தியாவசியம்தான் என்ன? என்றார். (மா)

## கி.சே. அலுவலர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதி பற்றி அறிக்கை பெற்ற பின்னரே பெறுமதிச் சான்றிதழ்கள் வழங்குவதால் கிராமசேவை அலுவலருக்கு இப்படியான பெறுமதி மதிப்பீட்டுக்கும் அறவிடப்படும் பணத்தில் அரைப்பங்கு வழங்கப்படவேண்டும்.

"அரசாங்கத்தால் புதிதாக அமைக்கப்படவுள்ள பிரதேச அபிவிருத்திச் சபைகளுக்கு உதவி அரசாங்க அதிபர்களே செயலாளர்களாக நியமிப்பது போல, கிராமோதய அபிவிருத்திச் சபைகளுக்கும் அவ்வந்தப் பகுதி கிராம சேவை அலுவலர்களே நியமிக்கப்பட வேண்டும்.

கிராம சேவை அலுவலர்களின் சேவைக்காலத்திற்கேற்ப தர உயர்வு கொடுத்து தாவுகாரர்வுக்குரிய சம்பளம் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இச் சங்கம் கோருகிறது." (மா)

## "யாழ்-கொழும்பு கடுகதி புகையிரதசேவை மீண்டும் ஆரம்பிக்கவும்"

### காவலூர் எம். பி. தந்தி

[யாழ்ப்பாணம்]

யாழ்-கொழும்பு கடுகதி புகையிரத சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படி காவலூர் எம் பி. க. பொ. இரத்தினம், போக்குவரத்து அமைச்சருக்கும் புகையிரத திணைக்கள பொதுமுகாமையாளருக்கும் அவசரதந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்

அத் தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"யாழ்ப்பாணத்துக்கும்- கொழும்புக்கும் இடையே போக்குவரத்துச்சேவையிலிடுபட்ட கடுகதிப் புகையிரதங்கள் சென்ற சில நாட்களாக நிறுத்தப்பட்டுள்ளதென்றும் மீண்டும் இச்சேவை நடைபெறுமென்றும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன, எனினும் இச்சேவை இன்னமும்தொடக்கப்படவில்லை என மக்கள் முறையிடுகின்றனர். இதுவும் தமிழ் மக்களுக்கு விதிக்கப்படும் தண்டனையா? புறக்கணிப்பா என்றும் சிலர் கேட்கிறார்கள்? இச் சேவை மீள உடனே தொடங்குவதற்கு ஆவன செய்ய அறிவிக்கவும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

எம்மிடம்......
இறக்குமதிசெய்யப்பட்ட

றெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சிற்
பொலித்தின் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்.

எச். இஸ்மாஸ்ஜி அன் கோ
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

## 'பணம்பொருள்கைத்தொழில் அரசு ஊக்கமளிக்கிறது'

### 'கற்பகம்' திறப்புவிழாவில் 'இராசு'

[கொழும்பு]

''பணம்பொருட் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலம் பெருந்தொகையான வெளிநாட்டு நாணய மாற்றைச் சம்பாதிப்பதுடன் பெருமளவிலான இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கமுடியும்.''

மேற்கண்டவாறு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, நேற்று பம்பலப்பிட்டியில் 'கற்பகம்' என்னும் பணம்பொருள் அபிவிருத்திச்சபை விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், ''இதன் காரணமாகவே பணம்பொருட் கைத்தொழில் அபிவிருத்திக்கு அரசாங்கம் ஊக்கமளித்துவருகிறது என்றும், தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி வைப்பதில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அக்கறைகொண்டுள்ளார்'' என்றும் கூறினார்.

## சோவியத்-மலேசியா உறவில் சிக்கல்

[கோலாலம்பூர்]

சோவியத் ராஜதந்திரிகள் மூவர் மலேசியாவிலிருந்து அந்நாட்டு அரசாங்கத்தால் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து சோவியத்-மலேசிய உறவுகளில் சிக்கல் ஏற்படலாமென மேற்கத்தைய அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து மாஸ்கோவிலுள்ள மலேசிய ராஜதந்திரிகளை அங்கிருந்து சோவியத் யூனியன் வெளியேற்றுமென்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

சோவியத் யூனியனுக்கும் மலேசியாவுக்குமிடையில் 1967ம் ஆண்டில் பூரணமான ராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்ட ஒரு வருடத்தின் பின்னர், சோவியத் யூனியன் மலேசியாவில் தூதரகத்தை அமைத்தது.

மலேசியாவிலிருந்து மூன்று சோவியத் ராஜதந்திரிகளும் நேற்று வெளியேறினர். [வெ]

## துன்னாலை வாலிபர் கொலை

## சந்தேக நபர்களுக்கு பிணை அனுமதி மறுப்பு

[புலோலி]

துன்னாலை வாலிபர் இராசகோபால் கொலைச்சந்தேக நபர்கள் மூவருக்கும் பிணை அனுமதி மறுக்கப்பட்டு இம் மாதம் 23ம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

துன்னாலை வாலிபரான இராசா இராசகோபால் [யப்பான்-வயது26] என்பவரின் கொலைச் சந்தேக நபர்களான சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம், மாணிக்கம் சின்னத்தம்பி, வடிவேலு சரவணசிவா ஆகிய மூவரும் மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சிற்றம்பலம் இக் கொலைச் சம்பவம் தொடர்பாக இன்னொரு சந்தேகநபரான சுப்பிரமணியம் சக்திவடிவேல் என்பவர் தேவைப்படுகிறார் என்றும் அவர் தலைமறைவாக இருந்து வருவதனால் இன்னமும் விசாரணை பூர்த்தியடையவில்லை என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார். இதனைத்தொடர்ந்து நீதவான் தொடர்ந்தும் சந்தேக நபர்களை இம்மாதம் 23ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## ஈழ மாணவர் மன்றம் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

மலையகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இடம்பெற்ற குரூரத்தனமான தாக்குதல்களைத் தொடர்ந்து பட்டிருப்புத் தொகுதியிலுள்ள தமிழ்க் கிராமங்கள் மீதும் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து, ஈழ மாணவர் பொது மன்றம் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது சம்பந்தமான சுவரொட்டிகளும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன. [மா]

## கொள்ளைச் சம்பவம்: ஒருவர் படுகொலை!

[யாழ்ப்பாணம்]

அவலக் குரல் கேட்டு ஓடி வந்த அயல் வீட்டுக்காரர், கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

நீர்வேலி, ராஜ வீதியில், கரந்தன் கிராமத்திலேயே இச் சம்பவம் இடம்பெற்றது.

கரந்தன் கிராமத்தில், பூதத்தம்பி சிவக்கொழுந்து என்பவரின் வீட்டில் நள்ளிரவு நேரத்தில் ஆயுதந் தாங்கிய நால்வர், 1500 ரூபாவையும், ஒரு தங்கச் சங்கிலியையும் கொள்ளையடித்துக் கொண்டு ஓடியபொழுது வீட்டுக்காரர் சத்தமிட்டதாகவும், அப்பொழுது பக்கத்து வீட்டுக்காரரான கே. ராஜலிங்கம் என்பவர் ஓடிவந்து ஒருவரைப் பிடித்தபொழுது அவர் கத்தியால் வெட்டிவிட்டு, ஓடிவிட்டதாகவும் கோப்பாய்ப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

கத்தியால் வெட்டப்பட்டவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

கோப்பாய்ப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் உதவியுடன் யாழ். உதவிப் பொலிஸ் அதிபர்களான திரு. எஸ். எஸ். நவரட்ணராசா, திரு. எட்மண்ட் கருணநாயக்கா ஆகியோர் புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். பதில் நீதிபதி திரு. எஸ். அமிர்தலிங்கம் மரணவிசாரணைகளை மேற்கொண்டுள்ளார். [மா]

## ஆறு இளைஞர்கள் சார்பில் அரசிடம் நஷ்ட ஈடுகோரி வழக்குத் தாக்கல்!

[யாழ்ப்பாணம்]

1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 14ம் திகதி அவசர காலச் சட்டம் அமுலில் இருந்த காலத்தில் காணாமற்போன ஆறு இளைஞர்கள் சார்பில் அரசாங்கத்திடம் தலா ஒரு லட்சம் ரூபா நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் மரணமானவர்களான இன்பம், செல்வம் ஆகிய இருவர் சார்பில் யாழ்ப்பாணம் நீதிமன்றத்திலும், பரமேஸ்வரன், ராஜேஸ்வரன், பாலேந்திரா, இந்திரராசா ஆகிய நால்வர் சார்பில் சாவகச்சேரி நீதிமன்றத்திலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ்விளைஞர்களின் பெற்றோர், மனைவி சார்பில் நீதிமன்றங்களில் சட்டத்தரணி இ. பி. சேவியர் இந்த நஷ்ட ஈடு வழக்கைத் தாக்கல்செய்துள்ளார். [மா]

உங்கள் முதலீட்டிற்கு
27 0/0 வட்டி
நாங்கள் வழங்குகின்றோம்
அத்துடன் உங்களுக்கு
★ ஆயுள் காப்புறுதி இனும்
★ வீட்டுப்பாவனைப் பொருட்கள்
(பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்)
நாம் உங்களுக்கு
41 வருடங்களாகச்
சேவை செய்துவருகின்றோம்
என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றோம்.
★ நம்பிக்கை
★ பாதுகாப்பு
★ ஸ்திரத்தன்மை
வடமாகாணத்திலேயே மிகக்கூடிய முதலீட்டாளரைக் கொண்ட ஒரே ஒரு தனியார்துறை நிதி நிறுவனம்
TFC
த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
191, 249 ஏ, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம், போன்: 7680

## காமராஜரின் பிறந்தநாள்

சென்னை, ஜூலை 14

பெருந்தலைவர் அமரர் காமராஜரின் 79வது பிறந்தநாள் புதன்கிழமை தமிழ் நாடெங்கும் கொண்டாடப்படவுள்ளது. [வெ]

## உண்ணாவிரதம்: அனுமதி மறுப்பு

சென்னை, ஜூலை 14

தமிழகக் கல்லூரிகளின் இட ஒதுக்கீட்டைக் கண்டித்து திராவிடர் கழகமும், பிராமணர் சங்கமும் நாளை புதன்கிழமை நடத்தவிருந்த போட்டி உண்ணாவிரதத்திற்கு பொலிசார் அனுமதி மறுத்துள்ளனர். [வெ]

## யாழ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறப்பான வரவேற்பு

யாழ். மாவட்டசபைச் செயலாளராக நியமிக்கப்பட்ட திரு. தேவநேசன் நேசையா, நேற்றுக் காலை பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கியபோது அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கை விமானப்படையின் விசேட விமானத்தில் திரு. தேவநேசன் நேசையா, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கூனுடன் வந்து சேர்ந்தார்.

இவரைப் பலாலி விமான நிலையத்தில் வைத்து மேலதிக அரசாங்க அதிபர்களான திரு. எஸ். எஸ். தர்மபாலன், திரு. என். பஞ்சலிங்கம் திரு. குலநாயகம் உட்பட மற்றும் பல சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் வரவேற்றனர். [மா]

## நயினை உற்சவம்: விசேட பஸ்சேவை

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு நாகபூசனி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தையொட்டி வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர், யாத்திரீகர்களின் வசதியைமுன்னிட்டு கடந்த வருடங்களைவிட இம்முறை திறமையான பஸ்சேவையை நடத்துவதற்குரிய ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

இம்மாதம் 15ம் திகதிமுதல் 17ம் திகதிவரை நடைபெறவிருக்கும் சப்பறம், தேர், தீர்த்த உற்சவங்களையொட்டி வடபகுதியின் முக்கிய இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலைய ஊடாக குறிகட்டுவான், இறுப்பிட்டி ஆகிய இடங்களுக்கு நேரடி பஸ் சேவை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இச்சேவையில் மூப்பது பஸ் வண்டிகள் ஈடுபடும். வட பிராந்தியபோக்குவரத்து சபை தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் இந்த உற்சவ சேவைக்குப் பொறுப்பான கோண்டாவில் சாலை அதிபருக்கு யாத்திரிகளின் தேவைக்கேற்ப பஸ் வண்டிகளை ஏனைய சாலைகளிலிருந்து எடுத்துப்பாவிக்கும்படியும் பணித்துள்ளார்.

## ரயில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பும் பொருட்டு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு வந்தனர் என்றும், ரயில் மேடையில் ஏற்பட்ட ஒரு சச்சரவைத் தொடர்ந்து ரயில்நிலையமே பெரும் பரபரப்புக்குள்ளானதென்றும் இதுபற்றிக்கூறப்படுகிறது.

இரண்டுபேருக்கிடையே ஏற்பட்ட சிறு சச்சரவைத் தொடர்ந்து ஒரு இளைஞர் காயமடைந்தாரென்றும், இந்த இளைஞர் பின்னர் ரயில் நிலையத்தில் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரயில்நிலையத்தில் பதட்ட நிலை உருவாகி, ரயில் பிரயாணிகள் பெரிதும் பீதிகொண்ட நிலையில், யாழ். ரயில்நிலையப் பிரதம புகையிரத நிலைய அதிபர் திரு. ஜோன் தம்பிராசா, கடற்படைத் தளபதியுடன் தொடர்புகொண்டார்.

இந்நிலையில், ரயிலும் வந்து சேரவே பிரயாணிகள் அவசரம் அவசரமாக ரயிலில் ஏறிக்கொண்டனர். ரயில் நிலையத்துக்கு வந்த பலர் அங்குமிங்கும் சிதறி ஓடத்தொடங்கிவிட்டனர்.

கொழும்பு ரயில் புறப்பட்ட சில நிமிட நேரங்களில் கடற்படையினர் வந்த வாகனமும் அங்கிருந்து புறப்பட்டுவிட்டது.

நேற்றிரவு நிகழ்ந்த இச்சம்பவம் தொடர்பாக யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனிடமும் பலர் புகார்செய்துள்ளனர்.

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு; செல்லமுத்து ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் 173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0325

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SrLanka
Regd No. QB 100288/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126